# # End All Forms of Abuses Against Children#

## Observation of International Day of the Girl Child – 2022, Salem

### *Theme: "Our Rights, Our Future"*

In the Indian Society girl children are considered as the curse from the ancient time, but in today's modern world the women and girls have transformed themselves to standout in the world. We do worship many goddesses, but we do not even give little respect to a woman or a girl who live in our homes. In order to counteract the negative practices and also to ensure the rights of the girl children and women, the Good Shepherd Sisters are working in Ayothiyapattinam Block, Salem District for the past 23 years. In collaboration with District Child Protection Unit, Village Level and Block Level Child Protection Committee Members of Ayothiyapattinam Block they had organised a week-long awareness campaign both in Government Higher Secondary Schools and Village Communities from 11th to 16th October. The IDFC First Bharat CSR Team joined us in the campaign and sponsored refreshment to the children.

On 11th of October 2022, the campaign on # End all forms of Abuses Against Children# was inaugurated in Udaiyapatti Government Higher Secondary School, Ayothiyapattinam Block by Mr. J. Elango, Block Development Officer, Ms. Lavanya Grace, State Level Child Marriage Protection and Adolescent Girls Development Officer (UNICEF), Sr. Aruna George, Program Director, Good Shepherd Sisters (Salem), and Panchayat Presidents, Village Administrative Officers and NGO Partners from various villages of Ayothiyapatinam Block. All of them spoke about the importance of education to girl children and the responsibility of everyone to stand against all forms of abuse and ensure the rights of the Girl Children.

**Poster Release:** An awareness poster was released by Mr. J. Elango, Block Development Officer and Sr. Aruna George, Program Director with all the important Toll-Free Numbers and the Mobile Apps published by the State and Central Governments. It was an initiative by Good Shepherd Sisters, Salem along with the District Child Protection Unit.

A Puppet Show was enacted on the theme #End Child Marriage, End School Dropout and End all forms of Abuses.

The campaign was organized in eight schools and five village communities wherein the children participated in various competitions such as drawing, essay writing, speeches and poem writing on the rights of girl children. The winners were awarded with prizes.

Through these week long campaign, the sisters and partners in mission were able to reach around 3000 children and their family members to alarm and highlight the rights of the girl children and also to insist on the roles and responsibilities of Village and Block Level Child Protection Committee Members to work towards the betterment of the children in their own villages.

It was a happy co-incidence that Sr. Annie Thomas, Principal, Mrs. Sashi Natarajan and three other teachers along with thirty six students from Good Shepherd School Chennai joined the Salem Team for the campaign for two days.




புதுச்சேரி மற்றும் தமிழகம்
மாலை எக்ஸ்பிரஸ்
MAALAI EXPRESS
மாலை நாளிதழ்

# பெண் குழந்தைகள் தின விழா



**சேலம், அக். 13-**

சேலம் சர்வதேச பெண் குழந்தைகள் தினத்தை முன்னிட்டு சேலம் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு மற்றும் நல்லாயன் கன்னியர் இல்ல சகோதரிகள் மற்றும் பணியாளர்கள் இணைந்து உடையாபட்டி ஊராட்சி அரசினர் மேல்நிலைப்பள்ளியில் மாணவ, மாணவர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் சிறப்பு அம்சமாக அயோத்தியபட்டணம் ஒன்றியத்தில் உள்ள பல்வேறு கிராமங்களில் இருந்து சர்வதேச பெண் குழந்தைகள் தினத்தை ஒட்டி நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் அயோத்தியபட்டினம் வட்டார வளர்ச்சி அலுவலர் இளங்கோ தலைமையேற்று பெண் குழந்தைகளின் உரிமைகள் மற்றும் மேன்மையை எடுத்துரைத்தார்.

அதை தொடர்ந்து நல்லாயன் கன்னியர் இல்ல திட்ட இயக்குனர் அருட் சகோதரி. அருணா ஜார்ஜ் பெண் குழந்தைகள் எல்லா சூழலிலும் தைரியத்துடன் மற்றும் சிறப்பான முறையில் பாகுபாடு இல்லாத சமத்துவ சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்று உரக்க எடுத்துரைத்தார். மாநில குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் லாவண்யா கிரேஸ் பெண் குழந்தைகளின் கல்வி முக்கியத்துவம் மற்றும் பெண் குழந்தைகள் சந்திக்கக்கூடிய முக்கியமான சவால் குழந்தை திருமணத்தை பற்றி விரிவாக எடுத்துரைத்தார்.

இந்த விழிப்புணர்வு நிகழ்வில் பெண் குழந்தைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் குழந்தைகள் பாதுகாப்பிற்கான இலவச தொலைபேசி எண்கள் மற்றும் மொபைல் செயலிகள் அடங்கிய 'சுவரொட்டியை' வட்டார வளர்ச்சி அலுவலர், ஊராட்சி தலைவர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் நல்லாயன் கன்னியர் இல்லம் திட்ட இயக்குனர் இணைந்து வெளியிட்டனர்.

அதைத்தொடர்ந்து அனைத்து நிர்வாகிகள் மற்றும் குழந்தைகள் இணைந்து பெண் குழந்தைகளுக்கு எதிரான அனைத்து வகையான வன்முறைகளையும் முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்று உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.

இறுதி நிகழ்வாக வேண்டாம் வேண்டாம், குழந்தை திருமணம் வேண்டாம் என்ற முழக்கத்துடன் பொம்மலாட்டம் வடிவில் விழிப்புணர்வு நிறைவடைந்தது.